செ.வெ.எண்: 820/2016 நாள்: 23.11.2016

**கால்நடை பராமரிப்புத்துறை, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாலின எருமை வளர்ப்பு திட்டத்தை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2016-17-ன் கீழ், களியக்காவிளை அருகில் உள்ள தச்சன்வளாகத்து வீடு என்ற இடத்தில் பயனாளி திரு. விமல்குமார் என்பவர், அரசு மானியத்துடன் பாலின எருமை வளர்ப்பு திட்டத்தை இன்று (23.11.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, கால்நடை பராமரிப்பபுத்துறையின் மூலம், கிராமபுற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016 - 2017-ம் ஆண்டு கால்நடை பராமரிப்பு துறை, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாலின எருமை 4 அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்ட மதிப்பீடு மத்திய, மாநில அரசுகள் 60 : 40 விகிதாசார மானியம் மற்றும் பயனாளிகளின் சிறிய பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது. ஒரு அலகு நிறுவுவதற்கான திட்ட மதிப்பீடு ரூ.4,32,500/- ஆகும். பாலின எருமை மாடுகள் கொள்முதலுக்கான தொகை தவிர, மேலும் சிறிய அளவில் பண்ணை அமைப்பதற்கு தேவையான உப பொருள்களான மழை தெளிப்பான் கருவி, புல்வெட்டும் கருவி, கொட்டகை அமைப்பு, காப்பீடு, தீவன புல் வளர்ப்பு முதலிய தேவைகளுக்கும் மானியத்துடன் கூடிய செலவுத்தொகை வழங்கப்படுகிறது.

இந்த பாலின எருமை வளர்ப்பு திட்டத்தில் முதலில் 3 மாடுகளும், மூன்று மாதங்கள் கழித்து 2 மாடுகளும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

முன்னதாக கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் பறவைகளுக்கு பறவைக்காய்ச்சல் நோய் தாக்கியதை மத்திய அரசு உறுதிப்படுத்தியதை தொடர்ந்து அந்நோய் நமது மாநிலத்தில் பரவாமல் தடுக்க கேரள தமிழ்நாடு மாநில எல்லைகளில் மொத்தம் 26 சோதனைச்சாவடிகள் கால்நடை பராமரிப்புத்துறையினரால் நிறுவப்பட்டு 24 மணி நேர கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் களியக்காவிளையில் பறவைக் காய்ச்சல் சோதனைச்சாவடி ஏற்படுத்தப்பட்டு மாநில எல்லை கடந்து கேரளாவிலிருந்து தமிழ்நாடு வரும் அனைத்து பாரம் ஏற்றும் வாகனங்களுக்கும் கிருமிநாசினி (Chlorine di-oxide) தெளிக்கப்படுகிறது.

இதுவரை சோதனைச்சாவடியில் சுமார் 3,400 வாகனங்கள் கிருமிநாசினி தெளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, சுழற்சி முறையில் 24 மணி நேரமும் சோதனைச்சாவடி கண்காணிப்பு செய்யப்படுகிறது.

நமது மாவட்டத்தில் பறவை காய்ச்சலினால் இதுவரை எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை. இனிமேலும் ஏற்படாதவகையில் மாவட்ட நிர்வாகம் மூலம் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் ஒருபோதும் அஞ்ச வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது மண்டல இணை இயக்குநர் மரு. சு. ஜோதிராஜலிங்கம், துணை இயக்குநர் மரு. பின்டன் மிசியர், உதவி இயக்குநர்கள் மரு. சி. ஜெயபால், மரு. இரா. ரிச்சர்டுராஜ், மரு. ஆ. தயாசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.